மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்டங்கள்தோறும் இதுபோன்ற பறக்கும் படைகள் ஏற்பாடு செய்வதற்கில்லை. ஆனால் மாவட்டங்கள்தோறும் இருக்கும் அதிகாரிகளுக்கு ஜீப் கொடுத்து சோதனையிடச் செய்திருக்கிறோம். வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக கூறியிருக்கிறேன்.

Die-heads of Japanese make

* 419 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state;

(a) whether used die-heads Japanese make were sold by the Tamil Nadu Small Industries Corporation Limited, in 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஈரோடு, திருகு, மறை உற்பத்திப் பிரிவில் (Bolts and Nuts Unit) உள்ள, பழையதும், தேய்ந்து போனதும், பயன்படத் தகுதியற்றதென ஒதுக்கப்பட்டதுமான ஜப்பானிய வார்ப்பு அச்சு ஒன்றுதான் (Die-head) தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தினால், 1969-ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது.

(இ) திருகு மறை போடும் பொறிவுடன் (Bolt Threading Machine) மேற்குறிப்பிட்ட உபயோகமற்ற வார்ப்பு அச்சும் Die-head) பெறப்பட்டது. அப்பிரிவின் கண்காணிப்பாளர் உபயோகமற்ற இயந்திரம் அங்கு இருப்பதை 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கழகத்திற்கு அறிவித்தார். முறைப்படியாக ஒப்பந்தப் புள்ளி விவர நடைமுறைகளைக் கடைப்பிடித்த பிறகு, அப்பொறி, திண்டுக்கல்லில் உள்ள கணபதி மெக்கானிக்கல் புரோடக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 2,001-க்கு விற்கப்பட்டது.

Ceramic factory at Vridhachalam

* 420 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the production of sanitary-wares has been started at the Ceramic Factory Limited, Vridhachalam; and

(b) the steps taken to find market for them ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு சிறு தொழில் கூட்டு நிறுவனத்தின் ஒரு பிரிவாகிய விருத்தாசலம் மட்பாண்டத் தொழிற்சாலை 1960 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.

(இ) தமிழ்நாடு சிறுதொழில் கூட்டு நிறுவனம், சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி பகுதிகளில் துப்புரவுச் சாதனங்களுக்கான ஒன்பது மொத்த விற்பனையாளரை (Stockists) நியமித்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்துக்காக, ராஜமந்திரியில் மொத்த சில்லரை விற்பனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளரை நியமிப்பதற்காக இத்தொழில் நிறுவனத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்திலும், கோவாவிலும் இப் பொருட்களை விற்பதற்காகச் செல்வாக்கு மிக்க வணிகர் ஒருவர் பெங்களூரில்